**ஜனவரி - 14**

**"ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம் பண்ணேன்." - 1கொரி 9:26**

எல்லா சக்தியையும், மனதின் திறமையையும், சரீரத்தின் திறமையையும் முற்றிலுமாகக் கர்த்தருக்கென்று கொடுக்கிற சித்தத்தின் முழுப் பிரதிஷ்டையை நன்றாகப் புரிந்துகொண்டு செய்திருப்பது, விழுந்துபோன மானிட சுபாவத்தின் பலவீனத்திற்கு ஒரு பெரிய உதவியாகக் காணப்படும். கர்த்தருக்கென்று தான் பிரதிஷ்டை செய்திருப்பது கர்த்தருடைய சேனையில் பெயர்பதிவு செய்திருப்பது ஆகிய இவைகளின் இந்த சரியான கருத்தைக் கொண்டிருக்கிற ஒருவர், கர்த்தருக்குக் கொடுக்க இதற்கு அதிகமாக ஒன்றுமில்லை என்பதை தெளிவாக அறிந்து கொள்ளுகிறார். ஆகையால், சித்தத்தின் போராட்டம் அவனுக்கு எதுவாயிருந்தாலும், அவன் முடிவாக "நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்" என்று சொல்ல முடிவாகத் தீர்மானிக்கும்போது, எல்லாம் முடிந்துவிட்டன. ஆகையால், கர்த்தருடைய சேனையில் பெயர்பதிவு செய்திருப்பதின் காலவரை மரணப்பரியந்தம் என்பதைப் போராட்டத்திலிருந்து பின்வாங்க வேண்டும் என்கிற யோசனையை சிந்தித்துப் பார்ப்பதற்கும், விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை ஒருமணி நேரமும் நிறுத்தி வைப்பதற்கும் இடமே இல்லை என்பதையும், எல்லா போர்சேவகரும் தெளிவாக அறிந்து கொள்ளுவது எவ்வளவு முக்கியமானதாயிருக்கிறது.! **- Z ’03, 421 (R 3272).**

வெற்றிகரமாக கிறிஸ்தவ ஜீவியத்தை விடாமல் நடத்துவதற்காக, செய்யவேண்டிய காரியங்களைப்பற்றி அறிந்திருத்தலும், இலட்சியத்தை இடையறாமல் உயர்வாக மதித்தலும், அதை கருத்தில் கொண்டிருத்தலும், மிகவும் அவசியமானது. பந்தயத்தின் நிபந்தனைகளைப் பின்பற்றாமலும் ஓட்டத்தைப்பற்றி அறியாமலும், பந்தயத்தின் வெகுமதியைப்பெற எதிர்பார்ப்பது எவ்வளவு அர்த்தமற்றதாயிருக்கிறதோ, அவ்வளவு ராஜ்ஜியத்தில் வெகுமதி கொடுக்கப்பட்ட நோக்கத்தையும் அதற்காக ஓடவேண்டிய ஓட்டத்தையும் அறியாமலிருந்து, தாங்கள் அறியாமலும் கடைபிடிக்காமலுமிருந்த நிபந்தனைகளுக்கடியில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கிறிஸ்துவோடு சேர்ந்து ராஜ்யத்தின் அந்த வெகுமதியைப்பெற ஜனங்கள் எதிர்பார்ப்பதும் அர்த்தமற்றதாயிருக்கிறது. **- P ’31, 191.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**2நாளா 20:15,17; சங் 19:5; பிர 9:11; 1கொரி 9:24-27; கலா 5:7; பிலி 2:16;3:14,15; எபி 6:20; 12:1,2; எபே 6:11,17; 1கொரி 16:13; 2தீமோ 2:3,4; 4:7; எபி 12:10; 10:32; 11:34; 1தீமோ 6:12.**

**கோபுர வாசிப்பு : Z ’11, 136 (R 4809).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் கிறிஸ்தவ ஓட்டத்திலும் போர்முறையிலும் நான் திட்டவட்டமாகவும், காரியத்தோடும் இருந்தேனா? ஏன் எப்படி? எந்தச் சந்தர்ப்பங்களில்? பலன் என்ன?**